பன்னிரெண்டாம் வகுப்பு அரையாண்டுப் பொதுத் தேர்வு 2024

பொதுத்தமிழ்

பகுதி - 1

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.
14x1=14

1. இ) நடை

2. ஈ) குடும்பம்

3. இ) ஈறுபோதல் இனமிகல்

4. அ) எச்.ஏ.கிருட்டிணனார்

5. அ) செப்பலோசை

6. அ) வடசென்னைப் பகுதிகள்

7. : இ) 3, 1,4, 2

8. அ) பண்புத்தொகை

9. இ) நெடுநல்வாடை

10. அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்.

11. : ஆ) கூற்று 1 , 2, சரி

12.விடை : ஆ) மன உறுதியுடையவர்

13. இ) கடுக்காய்

14. இ) ஆரணிய காண்டம்

பகுதி -II

பிரிவு -1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக
3x2=6

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

15.  கலைத்தொழிலில் வல்ல கலைஞர்கள் எத்திசைக்குச் சென்றாலும் உணவு தவறாது கிடைக்கும்.

 கல்வி அறிவில் சிறந்து விளங்கும் புலவர்கள் சென்ற இடமெல்லாம் மதிக்கப்படுவார்கள்.

16.  நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள் முதலிய தமிழ் நூல்கள் அக்காலத்து மனனப் பயிற்சிக்குப் பெரிதும் உதவின.

 கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பல்வேறு வாய்பாடுகள் கணிதத்தில் மனனப் பயிற்சிக்கு உதவின.

 சிறுவர்கள் படிக்கும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய அகராதி நூல்களும் அக்காலத்து மனனப் பயிற்சிக்கு உதவின.

17. i) நம் மனித வாழ்க்கை ஒரு விருந்தினர் இல்லம் போன்றது.

ii) அந்த இல்லத்திற்கு ஒவ்வொரு நாள் காலையிலும் ஒருவர் வந்து கொண்டு இருப்பார்.

iii) ஓர் ஆனந்தம், சற்று மனச்சோர்வு, சிறிது அற்பத்தனம், சிறிய விழிப்புணர்வு என்ற ஏதாவது

ஒருவர்எதிர்பாராத விருந்தாளியாக வந்து செல்வார். - என்று ஜலாலுத்தீன் ரூமி

உருவகப்படுத்துகிறார்.

18. i) 'கவிதையின் இயங்காற்றல்தான் நடை' என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

ii) “நடைபெற்றியலும்” என்றும்,

"நடைநவின்றொழுகும்" என்றும் சில சொற்றொடர்கள் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன.

iii) "ஆசிரிய நடைத்தே வஞ்சி ; ஏனை

வெண்பா நடைத்தே கலி'' என்றும் கவிதையின் நடைபற்றித் தொல்காப்பியம் தெளிவாகக்

கூறுகின்றது.

iv) மொழியின் தனிச்சிறப்புக் கூறாகவும், கவிதையின் வலிமை மிக்க உந்து சக்தியாகவும் நடை விளங்குகின்றது.

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

19. i) தாய்வழிக் குடும்பங்களில் பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவர்களாக இருப்பதால் பெண் குழந்தைகளின் பேறு முதன்மையாக விரும்பப்பட்டது.

ii) தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும், வளங்களும், செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.

iii) தாய்வழிச் சொத்துகள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தன என்பதை ஒரு மருதத்திணைப் பாடல் (குறுந். 295) தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறது.

20. மனத்தை அது போகும் போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி நல்லவழியில் செலுத்துவதே அறிவாகும். எனவே மனத்தை அதன் போக்கில் செல்ல விடக்கூடாது என்று வள்ளுவம் கூறுகிறது.

21. இறைமகனாரின் இன்னலைக் கண்ட மக்களின் புலம்பல்

- பகைவர்களின் இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் இவ்வுலகம் பிளந்து வெடிக்காமல் இருக்கிறதே!
- கொடியவர்களின் செயல்கண்டு வானம் இடிந்து விழவில்லையே !
- கொடிய மனம் படைத்த இந்த முரடர்களின் கடுஞ்சொல் கேட்டுக் கடல்நீர் வற்றிப் போகவில்லையே!

- இந்த உலகம் இன்னும் அழியாமல் தாமதிப்பதும் ஏனோ? - என்று இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் புலம்பினர்.

பிரிவு - 3

குறிப்பு: எவையேனும் ஏழனுக்கு விடை தருக:-

7×2=14

22) உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

அ) மாணவர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளாமல் கிணற்றுத்தவளை போல இருத்தல்

ஆ) எலியும் பூனையும் போல வாழ்வது எப்போதும் இன்பம் தராது. அது வேற்றுமைக்கே வழி வகுக்கும்.

23) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக

அ) : இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்து கொள்.

ஆ) : இரவிற்குச் சித்தப்பாவைக் காவலுக்குப் போகச் சொல்.

24) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) பூம்பாவாய் = பூ + பாவாய்

விதி : 'பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்' = பூம்பாவாய்

ஆ) வெங்கதிர் = வெம்மை + கதிர்

விதி : ஈறுபோதல் - வெம் + கதிர் விதி : முன்னின்ற மெய் திரிதல் - வெங்கதிர்

25) இலக்கணக் குறிப்பு தருக.

அ) வினையாலணையும் பெயர்

ஆ) வினைத்தொகை

26) ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக

அ) விளங்கி = விளங்கு + இ

விளங்கு - பகுதி; இ - வினையெச்ச விகுதி.

ஆ) பேசுவார் = பேசு + வ் + ஆர்

பேசு - பகுதி; வ் - எதிர்கால இடைநிலை ;

ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

27) பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க

அ) போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களுக்கு கலத்தில் நீர் தரப்பட்டது.

ஆ) நாம் அன்பால் வளர்த்த ஆட்டைக் கொன்று அதன் ஊனை ஊணாகக் கொள்வது உயர்வுதானா?

28) கலைச்சொல்லுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.

அ) இணையவங்கி முறை

ஆ) சிற்றீகை

29. i) இவற்றில் திருவளர் செல்வன் என்பதே சரியான தொடராகும்.

ii) ஏனென்றால், வினைத்தொகை சொல்லுக்கு இடையில் வல்லினம் மிகுதல் கூடாது.

30) தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

பகுதி -II

பிரிவு -1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

2x4=8

31. இடம் :

தண்டியலங்கார நூலில் பொருளணியியல் பகுதியில் இடம் பெற்ற பாடலில் காணப்படும் வரி இது.

பொருள் :

சூரியனும் தமிழும் ஒலிக்கின்ற நீர் நிறைந்த கடலால் சூழப்பட்ட இந்த உலகத்தின் இருளை அகற்றும் என்பது இதன் பொருளாகும்.

விளக்கம் :

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கிடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒளிர்கின்ற கதிரவன். பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புமை இல்லாததுமாக இருப்பது தமிழ்.

32. ▯ குண்டுமழை பொழிந்தது; நிலங்கள் அழிக்கப்பட்டன ; மனிதர்கள் சிதறி ஓடினர்.

▯ மனிதர்கள் எவரும் நடமாடாத பொழுதுகளில்தான் யானைகள் நடமாடும். அப்போது அவை இட்ட எச்சத்தில் இருந்தோ அல்லது ஏதோவொரு மனிதருடைய காலணிகளின் பின்புறம் விதையாக ஒட்டிக்கிடந்தோ ஒரு செடி உயிர்பெற்றிருக்கலாம்.

▯ போரின் பின் பிறந்த குழந்தையென அதிசய மலர் ஒன்று அச்செடியில் மலர்கிறது.

▯ மலரை அடையாளம் கண்டு எங்கிருந்தோ வண்ணத்துப் பூச்சி ஒன்று வருகிறது.

▯ நாளை பறவைகளும் அங்கு வரலாம்.

▯ செடியிலிருந்து பெருங்காடு உருவாகலாம்.

▯ அக்காடு பெருமழையைக் கொண்டு வரும்.

▯ அந்த அதிசய மலரின் புன்னகைப் பேரூழி கடந்து பிழைத்திருக்கும்.

▯ என பூச்செடி தோன்றிய காரணத்தைத் தமிழ்நதி விளக்குகிறார்.

33. விண்ணுலகம் மண்ணுலகம் ஈடாகாது :

தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும் தனக்கு உதவி செய்த ஒருவருக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.

உலகைவிடப் பெரியது :

உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலகத்தின் அளவைவிட மிகப் பெரியதாகும்.

கடலைவிடப் பெரியது :

இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

34. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினான். - இயற்கை வளங்களைச் சேதப்படுத்தியதன் விளைவை மனிதன் இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

2×4=8

35. i) பேரிடர்க் காலங்களில் தாங்கக் கூடியவையாக புதிய கட்டுமானங்களை அமைக்க வேண்டும்,

ii) நீர்வழிப் பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட்டு அப்பாதைகளைத்

தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.

iii) சமூகக்காடுகள் திட்டங்களைச் சமூக இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும்.

iv) கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலக்காடுகளை வளர்த்தல் வேண்டும்.

v) பதற்றமடைதலைத் தவிர்த்து வானிலை ஆராய்ச்சி மையம் வெளியிடும் புயல், மழை,

தொடர்பான தகவல்களின் அடிப்படையில் செயல்பட வேண்டும்.

vi) வதந்திகளை நம்பவோ, பரப்பவோ கூடாது.

vii) பாதுகாப்பு மையங்களையும், மருத்துவக் குழுக்களையும் அணியமாக வைத்து இருக்க வேண்டும்.

36. ஒலிக்கோலம் :

i) எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகின்றது.

ii) இசையோடும் இசைக்கருவியோடும்தான் கவிதை பிறக்கின்றது.

iii) ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்கின்றது.

- இதனையே ஒலிக்கோலம் என்பர்.

சங்கப்பாடலில் ஒலிக்கோலம் :

i) "கடந்தடு தானை மூவிருங்கூடி

உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே!"

எனும் புறநானூற்றுப் பாடலில் வன்மையான உணர்ச்சியைக் காட்டுகின்ற விதத்தில் க, த, ட, ற முதலிய வல்லின எழுத்துகள் அதிகமாக வருகின்றன.

ii) "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்

கடாஅ யானைக் கலிமான் பேக"

எனும் புறநானூற்றுப் பாடலில் நெடில் ஒலிகள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. iii) "நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை' எனும் புறநானூற்றுப் பாடலில் சில ஒலிகளும் சில சொற்களும் திரும்ப வந்திருந்து

இனிய ஓசையைத் தருகின்றன. -இவ்வாறு சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க பண்பாக விளங்குகின்றது.

37. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழ்

 மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் 16.12.1900 ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பிறந்தார்.

 தந்தையின் சித்த மருத்துவப் பின்புலமும், தமையனாரின் தமிழ் பின்புலமும் சீனி. வேங்கடசாமியைn வரலாற்று ஆய்வாளராய் உருவாக்கியது.

 25 ஆண்டுகள் தொடக்கப் பள்ளி ஆசிரியராய்ப் பணிபுரிந்தார்.

 விபுலானந்த அடிகள், கா. சுப்பிரமணியர், திரு. வி.க., தெ.பொ. மீ, ச.த. சற்குணர் ஆகிய அறிஞர் பெருமக்களிடம் கொண்டிருந்த தொடர்பால் பல்வேறு இதழ்களில் அவர் எழுதிய கட்டுரைகள் வெளிவந்தன.

 குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச் செல்வி, ஆரம்பாசிரியன், லக்ஷ்மி ஆகிய இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்தன.

 சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழி ஆய்வு எனப் பல துறைகளில் நூல்களைப் படைத்தார்.

 மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார்.

 திருமணமே செய்து கொள்ளாமல் இல்லத் துறவியாய் வாழ்ந்து, தம் வாழ்வை முழுமையாய்த் தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர்.

 தமிழக அரசின் முதற்பரிசு, தமிழ்ப் பேரவைச் செம்மல், ஆராய்ச்சிப் பேறறிஞர் ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

 பசும்பூண் பாண்டியன் தன் கொடியில் யானைச் சின்னத்தைக் கொண்டிருந்தான் என்று முதலில் வெளிப்படுத்தியது இவரது சிறப்பாகும்.

38. எண் கடையெழு வள்ளல்கள் செய்த செயல்

1. பேகன் மயிலுக்குத் தன்னுடைய ஆடையைத் தந்தவன்.

2. பாரி முல்லைக் கொடிக்குத் தன் பெரிய தேரினை ஈந்தான்,

3. காரி குதிரைகளையும் ஏனைய செல்வங்களையும் இனிய மொழிகளுடன் இரவலர்க்கு இல்லை என்று கூறாமல் கொடுத்தவன்.

4. ஆய் ஒளிமிக்க நீலவண்ணக் கல்லையும் நாகம் கொடுத்த ஆடையினையும்

ஆலின்கீழ் அமர்ந்த இறைவனுக்குக் கொடுத்தவன்.

5. அதியன் கிடைத்தற்கரிய அமுதத்தை ஒத்த நெல்லிக்கனியை ஔவைக்கு

வழங்கியவன்.

6. நள்ளி தன்னிடம் உள்ள பொருட் செல்வத்தை இல்லை என்று கூறாமல் நட்புக் கொண்டவர்களின் குறிப்பறிந்து வழங்கியவன்.

7. ஓரி வளம் நிறைந்த சிறிய மலை நாட்டைக் கூத்தர்க்குப் பரிசாக வழங்கியவன்.

பிரிவு - 3

குறிப்பு: எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

3×4=12

39. அ) இலக்கணம் :

இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி.

சான்று :

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி

ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்

மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது

தன்னேர் இலாத தமிழ் !

பாடலின் பொருள் :

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது இன்னொன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன்; இன்னொன்று தனக்கு நிகரில்லாத தமிழ்.

பொருத்தம் :

தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி அவற்றுள் தமிழ் தன்னேரிலாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை அணி ஆயிற்று.

39. ஆ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது.

இக்குறட்பாவில் பயின்று வரும் அணி நிரல் நிறை அணியாகும்.

அணி விளக்கம் :

நிரல் = வரிசை ; நிறை = நிறுத்துதல்.

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

பாடலின் பொருள் :

இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

அணிப்பொருத்தம் :

இக்குறளில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைபடக் கூறியுள்ளமையால் இது நிரல்நிறை அணி ஆகும்.

www.Padasalai.Net

40) கீழ்க்கண்ட பாடலைப் படித்துணர்ந்து அதன் மையக்கருத்தை எழுதி ஏதேனும் மூன்று நயங்களைப் பாராட்டுக

ஆசிரியர் குறிப்பு :

கண்ணதாசன் இன்றைய சிவகங்கை மாவட்டத்தின் சிற்றூரான சிறுகூடல்பட்டியில் பிறந்தவர். இவரது பெற்றோர் சாத்தப்பன் - விசாலாட்சி ஆவர், சிறந்த கவிஞராகவும் பேச்சாளராகவும் திகழ்ந்தவர். இவர் தமிழக அரசின் அரசவைக் கவிஞராகவும் இருந்தவர்.

திரண்ட கருத்து :

“வாழைக்குக் குருத்து அழகு !

பாட்டுக்குக் கருத்து அழகு !"

தமிழன்னையானவள், மூன்று சங்கங்கள் அமையக் காரணமானவள், முச்சங்கங்களிலும் நல்ல அனுபவமும் நல்ல அறிவும் கொண்ட புலவர்களை ஒன்றாகக் கூட்டியவள். அச்சங்கத்திற்கு அளவிட முடியாத பொருள்களைக் கூட்டி, சொற்களை அதிகரித்து அதே நேரத்தில் சுவைமிக்க கவிதைகளையெல்லாம் ஒரே இடத்தில் கூடிவருமாறு புதுமைகள் எல்லாம் அமைந்த பெருமகளே ! தமிழன்னையே !

மையக்கருத்து :

"வட்டத்திற்கு புள்ளி மையம்

பாட்டிற்கு கருத்து மையம் "

தமிழ் அன்னையின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன.

மோனைத் தொடை :

"குயவனின் கைவண்ணம் பானையிலே

புலவனின் கைவண்ணம் மோனையிலே"

என்பதற்கிணங்க இப்பாடலில் மோனை சிறப்புற அமைந்துள்ளது.

விளக்கம் :

பாடல் அடிகளிலோ அல்லது சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றுபோல் வரத்தொடுப்பது மோனைத் தொடை எனப்படும்.

எ.கா:

முச்சங்கம் - முதுபுலவர்

அச்சங்கம் - அளப்பரிய

எதுகைத் தொடை :

பாடல் அடிகளிலோ அல்லது சீர்களிலோ இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரத் தொடுப்பது எதுகைத் தொடை எனப்படும்.

“இயற்கைக்கு அழகு பொய்கை

பாட்டிற்கு அழகு எதுகை"

என்பதற்கிணங்க இப்பாடலில் எதுகைச் சிறப்பு அமைந்துள்ளது.

எ.கா :

முச்சங்கம் - அச்சங்கம்

சொற்சங்கம் - அற்புதங்கள்

இயைபுத்தொடை :

செய்யுள் அடிகளில் ஈற்றுச் சீரோ, அசையோ, சொல்லோ ஒன்றுபோல் வருவது இயைபுத் தொடையாகும்.

எ.கா :

கூட்டி கூட்டி

கூட்டி பெருமாட்டி

அணி நயம் :

"அணியில்லாப் பாட்டு நகையில்லா மங்கை" போன்றது ஆகும்.

www.Padasalai.Net

இப்பாடலில் உருவக அணி அமைந்துள்ளது.

எ.கா :

"அற்புதங்கள் எல்லாம் அமைத்த

பெருமாட்டி" என்ற வரிகள்

தமிழ்மொழியைப் பெருமைக்குரிய பெண்ணாக உருவகப்படுத்தி உள்ளதால் இது உருவக அணி - ஆகும்.

41) பாடாண் திணை - விளக்கம்.

- பாடு + ஆண் + திணை = பாடாண்திணை.
- ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் முதலிய நல்லியல்புகளைச் சிறப்பித்துப் பாடுவது பாடாண்திணை எனப்படும்.

பாடலின் கருத்து :

- அதியமான் நெடுமான் அஞ்சி எனும் மன்னன் பரிசிலர்க்காக அடைக்காத வாயில்களை உடையவன்.
- மக்களைக் காக்கும் மன்னர்களின் வழித்தோன்றல்.
- அறிவும் புகழும் உடையவர்களைப் போற்றும் தன்மை உடையவன்.

பாடல் - பொருத்தம் :

இப்பாடலில் அதியமானின் புகழ், கொடை முதலான பண்புகள் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளதால், இது பாடாண்திணை ஆயிற்று.

42) பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்தெழுதுக

அ) பழமொழி விளக்கம் :

தினையைப் பயிர் செய்தால் தினையை அறுக்க முடியும். வேறு வினையை விதைத்தால் அந்த வினையைத்தான் அறுக்க முடியும்.

வாழ்க்கை நிகழ்வு :

மாலாவும் நீலாவும் உயிர்த்தோழிகள். மாலா நன்கு படிப்பவள். எனவே அனைவராலும் மதிக்கப்பட்டாள். நீலா சுமாராகப் படிப்பவள். அளவாகவே

www.Padasalai.Net

மதிக்கப்பட்டாள். அது நீலாவிற்கு வருத்தத்தை உண்டாக்கியது. மாலாவை வருத்தம் அடைய வைக்க வேண்டும் என்று நினைத்தாள். ஒருநாள் வகுப்பாசிரியர் வகுப்பில் நாளை தேர்வு நடைபெறும் என்றார். நான் முடிவு செய்து கொண்டேன். மாலாவின் புத்தகம், நோட்டு ஆகியவற்றை எடுத்து என் பையில் வைத்துவிட்டேன். மாலை வீட்டிற்குத் திரும்பிவிட்டோம். இருவரும் இரவு சாப்பிட்டுவிட்டு புத்தகப் பையை எடுத்தோம். ஆச்சரியம். பைக்குள் எந்தப் புத்தகமும் இல்லை. என்ன ஆயிற்று? யோசித்தேன். அப்பொழுதுதான் உண்மை தெரிந்தது. எங்கள் இருவருடைய பையும் ஒரே மாதிரி. என் பை என நினைத்துக் கொண்டு மாலாவின் பையை நான் எடுத்து வந்துவிட்டேன். மாலா என் பையை எடுத்துச் சென்றுவிட்டாள். விழித்துக் கொண்டிருந்தேன். அம்மா வந்தார். ஆதரவாய் விசாரித்தார். நடந்ததைச் சொன்னேன். தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது உன் அளவில் நடந்துவிட்டது. உன்னை மாற்றிக் கொள் என்று அறிவுரை கூறினார்.

43) தமிழாக்கம் தருக.

மக்கள் உன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், அவர்கள் மொழியில் உரையாடு,

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

3x6=18

44) அ) i) ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் மழை அதிகமாகப் பொழியும். இப்பருவ காலத்தைப்

பழந்தமிழர் வாடைக்காலம் என்று அழைத்தனர்.

ii) நக்கீரர் இயற்றிய நெடுநல்வாடை எனும் சங்க இலக்கியத்தில் வாடைக்காலம் அழகாக

வருணனை செய்யப்பட்டுள்ளது.

ii) மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்த மேகமானது உலகம் குளிருமாறு புதிய மழையைப்

பொழிந்தது.

iv) தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, வளைந்த கோலையுடைய ஆயர்,

எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேயவிட்டனர்.

v) தாம் பழகிய நிலத்தைவிட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர்.

vi) அவர்கள் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களையுடைய காந்தள் மாலை கசங்கியது.

vii) பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றிய போதிலும் அவர்களது

பற்கள் நடுங்கின.

viii) விலங்குகள் குளிர் மிகுதியால் மேய்ச்சலை மறந்தன.

ix) குரங்குகள் நடுங்கின,

x) மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன. xi) பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.

xi) மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது அக்குளிர்கால நள்ளிரவு.

44. ஆ) உரிமைத்தாகம்

(பூமணி)

முன்னுரை :

கிராமத்தில் வாழக்கூடிய மனிதர்களுக்கும் நிலங்களுக்குமான உறவுமுறை முதன்மையானதாகும். நிலம் சடப்பொருள் அல்ல. நிலத்தோடு பேசக்கூடிய மனிதர்கள் இன்றைக்கும் கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வெக்கை நிறைந்த கரிசல் மண்ணில் அடமானம் வைத்த தன் நிலத்தை மீட்க

முடியாமல் தன் மண்ணை விட்டுப் பிரிந்து செல்லும் துயரத்தை இக்கதை பதிவு செய்கிறது.

பாகப்பிரிவினை :

முத்தையனும் வெள்ளைச்சாமியும் உடன்பிறந்த சகோதரர்கள். முத்தையனின் மனைவி மூக்கம்மாள், வெள்ளையனுக்கு அண்ணியாக இல்லாமல் அன்னையாக இருந்தாள்.

வெள்ளைச்சாமிக்குத் திருமணமானதும், அவன் மனைவி பேச்சைக் கேட்டு, சொத்தில் பங்கு கேட்டான். பாகம் பிரிக்கும்போது தன் அண்ணன் முத்தையனை எடுத்தெறிந்து பேசினான். தன் தம்பிதானே! பேசிட்டுப் போறான் என்று முத்தையன் நினைத்தாலும், அவன் பேசிய பேச்சு நெஞ்சில் முள்ளாய்க் குத்தியது. வளர்த்த கிடா மார்பில் பாய்ந்து ரணமானது அவன் மனசெல்லாம்.

நம்பிக்கைக்கிரயம் :

வெள்ளைச்சாமி இரண்டு வருடங்களுக்கு முன்னர் மேலூர் பங்காருசாமியிடம் இருநூறு ரூபாய் கடன் வாங்கியிருந்தான். வட்டிக்கு ஈடாக ஆறுமாதத்திற்கு முன்பு தன் நிலத்தை நம்பிக்கைக்கிரயமாக பங்காருசாமிக்கு எழுதிக் கொடுத்தான்.

முத்தையனின் தீராக் கோபம் :

தம்பி வெள்ளையன் தன் நிலத்தை பங்காருசாமிக்கு நம்பிக்கைக்கிரயம் எழுதிக் கொடுத்தது பற்றி மூக்கம்மாள் முத்தையனிடம் கூறினாள். வெள்ளைச்சாமி பேசிய பேச்சு முத்தையனின் மனதில் ஆறாத வடுவாய் இருந்ததால், அவன் தம்பிக்கு உதவ மறுத்துவிட்டான்.

பங்காருசாமி நிலத்தைக் கையகப்படுத்துதல் :

ஊரில் விதைப்பு நேரம் என்பதால் அனைவரும் மும்முரமாய் விதைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், வெள்ளைச்சாமியோ பங்காருசாமியிடம் கைகட்டி கண்ணீருடன் நின்று கொண்டிருந்தான். வாங்கிய பணத்தை எப்படியாவது அடுத்த ஆண்டிற்குள் தந்துவிடுவதாகவும் நிலத்தைத் தன்னிடம் திருப்பித் தருமாறும் பங்காருசாமியிடம் கெஞ்சினான். ஆனால், பங்காருசாமியோ

எதையும் காதில் வாங்காமல், 'யானை வாய்க்குள் போன கரும்பு, திரும்பாதது' போல நிலத்தைத் தன் பெயருக்கு மாற்றி எழுதிக் கொண்டிருந்தார்.

வெள்ளைச்சாமியின் கதறல் :

மண்டியிட்டு கடவுளிடம் கதறி அழும் பக்தனைப் போல, வெள்ளைச்சாமி நிலத்திலே நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கதறி அழுதான். பூமித்தாயே ! இதுவர என் குடும்பத்தக் காப்பாத்தினியே! இன்னிக்கு உன்னக் காப்பாத்தாம பறிகொடுத்து நிக்கறனே ! என்ன மன்னிச்சிரும்மா. உன்னவிட்டா எனக்கு வேற யாரு இருக்கா? நான் என்ன செய்வேன்னு தெரியலையே? என்று வெள்ளையன் புலம்பி அழுதான்.

வெள்ளைச்சாமி ஊரைவிட்டு வெளியேறல் :

தன் மண்ணைவிட்டு அகலும் ஏதிலியாய், சோகத்தைச் சுமந்து கொண்டு எங்கு செல்வதென்று தெரியாமல் கனத்த மனத்துடன் வெள்ளைச்சாமி தன் சொந்த மண்ணைவிட்டுப் பிரிந்து சென்றான்.

கண்ணீர்ப் பூக்கள் :

வெள்ளைச்சாமி பரபரப்பான ஒரு நகரத்தின் மூலையில் தினக்கூலியாக வாழ்க்கையைக் கழித்து வருகிறான். அவனின் மகன் தொட்டியிலே மண்ணை நிரப்பி ஒரு செடியை நட்டு நீர் ஊற்றிக் கொண்டிருந்தான். வெள்ளையனின் மனைவி, சொன்ன வேலையைச் செய்யாம என்ன செஞ்சிட்டு இருக்க? என்று மகனைத் திட்டியபோது, வெள்ளையன் அவனைத் திட்டாதே, அவனுக்கினு சொந்தமா இருக்கிறது இந்த மண்ணுமட்டுந்தான் என்று கூறிக் கண் கலங்க, செடியில் பூ பூக்கும் முன்பே அவன் கண்களில் கண்ணீர் பூத்தன.

முடிவுரை :

மண் என்பது வெறும் மண்மட்டும் அல்ல ; அது பண்பாடு; வாழ்க்கையின் அங்கம். வருவாய் பெரிதாக வரவில்லையென்றாலும் நில உரிமை, நிலம் சார்ந்த வேளாண்மை ஆகியவற்றை ஒரு பண்பாடாகவே கொண்டிருந்த மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

45) அ) முன்னுரை :

i) இயற்கை எழில் கொஞ்சும், அமைதியான சூழலை உடையவை கிராமங்கள்.

ii) கிராமங்கள் தங்கள் பசுமையையும் இயற்கை எழிலையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து

வருகின்றன.

iii) கிராமங்கள் தங்களின் அடையாளங்களை இழந்ததற்கான காரணங்களைப் பற்றி என் கருத்தை

விவரிக்கின்றேன்.

வேளாண்மை பொய்த்தது :

i) கிராமங்களின் தனிப்பெரும் அடையாளம் வேளாண்மை ஆகும்.

ii) பசுமைப் புரட்சி என்ற பெயரில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக செயற்கை உரங்களை

விதைத்தோம்.

iii) அதன் விளைவு, மண் தன் தன்மையை இழந்தது.

iv) வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தி குறைந்தது.

v) போதுமான அளவு பருவ மழையும் பெய்யாததால் வேளாண்மை கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

வேலையில்லாத் திண்டாட்டம் :

i) கிராமங்களின் முதன்மைத் தொழில் வேளாண்மை.

Ii) வேளாண்மை பொய்த்ததால், பலரும் வேலையில்லா நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

iii) வேலை தேடுவதற்காக கிராமங்களைவிட்டு, நகரங்களை நோக்கிச் செல்ல வேண்டிய சூழல்

ஏற்பட்டது.

iv) சுதந்திரம் பெற்று பல ஆண்டுகள் கடந்துவிட்டது. இன்றும் பல கிராமங்களில் அடிப்படை

வசதிகள்கூட செயல்படுத்தப்படவில்லை.

நகரமயமாதல் :

i) நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்பது அனைவரின் நோக்கமாக

உள்ளது.

ii) எனவே, கிராமங்கள் அனைத்தும் நகரங்களாக மாறிவருகின்றன.

iii) விளை நிலங்கள் யாவும் வீட்டு மனைகளாக்கி விற்பனை செய்யப்படுகின்றன.

iv) விவசாயிகளும் தங்கள் வருவாய்க்காக வேறு வழியின்றி தங்கள் நிலங்களை விற்பனை

செய்கின்றனர்.

முடிவுரை :

i) கிராமங்கள் வெறும் வாழ்விடங்கள் இல்லை.

ii) கிராமங்கள் நம் பண்பாட்டின் அடையாளங்கள், இயற்கையின் அங்கங்கள் என்பதை நாம் உணர

வேண்டும்.

iii) "இந்தியாவின் வளர்ச்சி என்பது இலட்சக்கணக்கான கிராமங்களின் வளர்ச்சி' என்ற

காந்தியடிகளின் பொன்மொழியைப் பின்பற்றி வாழ வேண்டும்.

45. ஆ) முன்னுரை :

நடிப்புலகின் சக்கரவர்த்தி என எல்லோரும் வியக்கின்ற மகத்தான நடிகர் சிவாஜிகணேசன். தான் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரத்திற்கு உயிர் அளித்துத் தன் வசனத்தாலும் உடல் அசைவுகளாலும் உருட்டுவிழி நகர்வாலும் காண்பவர்களைக் கட்டிப் போட்டுவிடுகின்ற கலைஞர். நவரச உணர்வுகளைத் தன்முகக் குறிப்புகளாலும் உடல் மொழிகளாலும் சிறப்பாக வெளிப்படுத்தி நடித்த மகா நடிகன். அந்த மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தைக் காண்போம்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

நினைவலைகள் :

சென்னையில் அரண்மனை போன்ற சிவாஜி கணேசனின் வீட்டிற்குள் பாலசந்திரனும் அவரின் நண்பர்களும் சிவாஜியுடன் ஒன்றாக உணவு அருந்தியபோது பாலச்சந்திரனின் மனதில் "இன்று மதியம் மிகச்சரியாக மூன்று மணிக்குள் ராதா பிக்சர்ஸ் பேலசின் வெள்ளித் திரையில் தென்னிந்தியத் திரைப்பட நடிப்புச் சக்கரவர்த்தி, தமிழ்நாட்டின் பெருமையின் புகழ்க்கொடி நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடிக்கும் தங்கப்பதக்கம்" என்று கேரள நகரின் வீதிகளில் சிவாஜி கணேசனின் பெருமைகளைச் சொல்லிக் குரல்விற்றுப் பிழைத்த அந்தப் பழைய 18 வயது பாலசந்திரன் நினைவலைகளில் மிதந்தான்.

சிவாஜியின் அரண்மனை வீடு :

சிவாஜியின் வீடு அரண்மனை போன்று இருந்தது. சிற்ப வேலைப்பாடுகள் செய்த மிகப்பெரிய கதவு. உள்ளே வரவேற்பறையில் இரண்டு பெரிய யானைத் தந்தங்கள் இருந்தன. இடப்புறம் மேலே செல்ல, பெரிய மாடிப்படிகள்.

மாடியின் ஒரு திருப்பத்திலுள்ள சுவரில் வீரபாண்டிய கட்டபொம்மன் வேடத்தில் வீரத்தையும் கம்பீரத்தையும் கொட்டி முழங்கிய சிவாஜிகணேசனின் ஆயில் பெயிண்ட் செய்யப்பட்ட படம். அடுத்த திருப்பத்தில் உடைவாள் உருவின நிலையில் சத்ரபதி சிவாஜி. வலது பெருவிரலால் மீசை முறுக்கி மந்தகாசப் புன்னகையுடன் நிற்கும் இராஜராஜசோழன் ஒருபுறம். ஒருபுறம் கண்ணாடி அறைக்குள் செவாலியர் விருதுடன் கூடிய மிகப்பெரிய வெள்ளைக்குதிரை. இவற்றை எல்லாம் கண்டு பாலசந்திரன் நடுங்கிப்போய் வணங்கி ரசித்தப்படி நிற்கிறார்.

சிங்கநடை :

ஒரே சீராய் அடி எடுத்து வைத்து, ஒவ்வொரு பாத அடி வைக்கும் போதும், மறுதோள் முன்னோக்கிச் சாய, தலை நிமிர்ந்து, நெஞ்சு விரிந்து, இசைக்கு அசைப்பது போலக் கைகள் வீசி, பார்வை இமை அசையாது மெல்ல மெல்லச் சிங்க நடை நடந்து வரும் அந்த மகாநடிகரைப் பார்த்த பொழுது ராஜராஜசோழனின் வருகையைப் பார்த்து பாலசந்திரனும் ராஜீவ்நாத்தும் எழுந்து காலில் விழுந்து வணங்கினர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மன அடுக்குகளில் சிவாஜியின் கதாபாத்திரங்கள் :

சிவாஜியும் ராஜீவ்நாத்தும் கதையையும் கதாபாத்திரத்தையும் பற்றிப் பேசிக் கொண்டிருக்க பாலசந்திரன் சிவாஜியின் புருவங்கள், கண்கள், முக பாவனைகள், உதடுகள், கைவிரல்கள், தாள, லய அபிநயங்கள் ஆகியவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஊழித் தாண்டவமாடும் ருத்ரன், கவசம் குண்டலம் அணிந்த கர்ணன், கவிதை ததும்பச் செய்த காளிதாசன், அமிழ்தத் தமிழ்மொழியின் உன்னதக் கவியான பாரதி, தாய்த்தமிழ் மண்ணின் வீரதீரச் சந்ததியான வீரபாண்டிய கட்டபொம்மன், குலோத்துங்கச் சூரியனான இராஜராஜசோழன் என சிவாஜியின் கதாபத்திரங்கள் பாலசந்திரனின் மன அடுக்குகளில் மின்னி மறைந்தன.

கவிக்கு மரியாதை :

என் இயக்குநர் ராஜீவ்நாத்திடம் 'இவர் யாரு' என்று என்னைக் கேட்டபோது இவர் கவிஞர் என்று சொன்னவுடன் என் முன்னால் இருகைகளையும் கூப்பி அவர் மென்மையாய்ச் சொன்னார் கவிஞரா! வணக்கம். எனக்கான மரியாதை அல்ல அது. காவியக் கலையிடம் மூத்த திராவிடனுக்கு இருக்கும் ஆழ்ந்த ஆதரவையும் மரியாதையையும்தான் அவர் காண்பித்தது.

சிங்கக் கர்ஜனை :

என் இயக்குநர் ராஜீவ்நாத் சிவாஜிகணேசனிடம் வீரபாண்டிய கட்டபொம்மன் பட வசனத்தில் ஒரு வசனம் எங்களுக்காகச் சொல்ல முடியுமா என்று கேட்டபோது நடந்த அதிசயம்.

சிவாஜிகணேசன் மெதுவாகக் குனிந்து, இடது கையால் வேட்டியின் தலைப்பைப் பிடித்து, மெதுவாக நிமிர்ந்து சட்டென விஸ்வரூபமெடுத்தது போலத் திரும்பி நின்றார். நாங்கள் மிரண்டு போனோம். உயரம் குறைவான, வயதான, எங்களிடம் இவ்வளவு நேரம் இயல்பாய்ப் பேசிக்கொண்டிருந்த சிவாஜிகணேசனல்ல அது. மனித ஆத்மாவை நடுநடுங்க வைத்த வீரபாண்டிய கட்டபொம்மன்தான் அது. சூரியன் அஸ்தமனம் ஆகாத பிரிட்டிஷ்

சாம்ராஜ்யத்தின் பிரதிநிதியான ஜாக்சன் துரைக்கு நேராக ஆதித் தமிழக வீர சிங்கக் கர்ஜனை அது.

பாலசந்திரனைப் பாராட்டும் மகாநடிகன் :

“இலங்கையில் போர்க்கொடிகள் பறக்கட்டும்.... யானை ஆயிரம், ரதம் ஆயிரம், குதிரைகள் இரண்டாயிரம், காலாட்படை ஒருகோடி, ஆ.... நானே வெல்வேன்" என்று ராவண வசனத்தை பாலசந்திரன் சொல்லி முடித்ததும், தான் ஒரு மாபெரும் நடிகன் என்பதையெல்லாம் ஒதுக்கிவிட்டு முதன்முதலாய் ஒரு நாடக வசனம் கேட்டும் சாதாரண மனிதனைப்போலக் கைதட்டிப் பாராட்டினார் சிவாஜி.

முடிவுரை :

விருந்து முடித்து, சிவாஜியின் வீட்டிலிருந்து திரும்பி, சீறிப்பாயும் காரில் உட்கார்ந்திருக்கும் போதும் பாலசந்திரனின் இதயத்தில் தெருக்களில் குரல் விற்றுப்பிழைத்த அந்த பழைய பையனின் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

46) அ) முன்னுரை :

'அறிவுடைமை' என்பது ஒருவன் கல்வியினாலும் கேள்வியினாலும் சேகரித்துக் கொண்ட அறிவை ஆராய்ந்து, தன் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்வதாகும்.

பாதுகாப்பு அறன் :

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும்; அன்றியும் பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணும் அதுவே ஆகும்.

நல்வழியில் செலுத்தும் :

மனத்தை அது போகும் போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவது அறிவாகும்.

மெய்ப்பொருள் காண்பது :

எப்பொருள் யார் யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் :

உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ, அந்நெறியில் தானும் உலகத்தோடு இணைந்து செல்வதே அறிவாகும்.

நடுங்கும்படி வரும்துன்பம் இல்லை :

பின்பு வரப்போவதை முன்பே அறிந்து காத்துக்கொள்ளும் வல்லமை கொண்ட அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

முடிவுரை :

அறிவுடையவர் ஒரு பொருளும் இல்லாவிட்டாலும் எல்லாம் உடையவராகவே மதிக்கப்படுவர். அறிவில்லாதவர் எல்லாம் உடையவராக இருந்தாலும் ஒன்றும் இல்லாதவராகவே கருதப்படுவர். ஆகவே, நாம் அறிவுடையவராகத் திகழ்வது இன்றியமையாததாகும்.

46. ஆ) முன்னுரை :

கம்பராமாயணம் கம்பரால் எழுதப்பட்டது. இரட்சணிய யாத்திரிகம் எச்.ஏ. கிருட்டிணனரால் எழுதப்பட்டது. இவ்விரு காப்பியங்களும் பல்வேறு ஒற்றுமைகள் கொண்டு விளங்குகின்றன. அவ்வொற்றுமைகளை இங்கு காண்போம்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்

வள்ளுவர்போல் இளங்கோவைப் போல்

பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை

என்றார் பாரதியார்.

கம்பர், வான்மீகி வடமொழியில் எழுதிய இராமாயணத்தைத் தமிழில் "இராமாவதாரம் ' எனப் பெயரிடப்பட்ட கம்ப இராமாயணத்தைக் கொடுத்தார்.

வழிநூலாக இருந்தாலும் முதல் நூலாகவே போற்றப்பட்டது கம்பராமாயணம்,

அதுபோல ஜான்பன்யன் ஆங்கிலத்தில் எழுதிய 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' என்னும் ஆங்கில நூலின் தழுவலாக இரட்சணிய யாத்திரிகம் என்னும் நூல் எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளையால் எழுதப்பட்டது.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வழி நூலாக இரட்சணிய யாத்திரிகம் இருந்தாலும் முதல் நூலாக எண்ணப்படும் தன்மை பெற்றது.

கம்பராமாயணம் கம்பரால் பெருமை பெற்றது.

இரட்சண்ய யாத்திரிகம் எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளையால் பெருமை பெற்றது. எனவே கம்பரும், எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளையும் ஒரு தன்மையராக மதிக்கப்படுகின்றனர். அதனால்தான் 'கிறித்தவக் கம்பர்' ஆகிறார் எச்.ஏ. கிருட்டிணனார்.

கம்பர் 'விருத்தம்' என்ற பாவகையில் இராமாயணத்தை எழுதினார். எச்.ஏ. கிருட்டிணனாரும் விருத்தம் என்ற பாவகையில் இரட்சணிய யாத்திரிகத்தை எழுதினார். காப்பியச் சிற்றுறுப்புகளாக கம்பரும் படலத்தைப் பயன்படுத்தினார். எ.கா : திருவடி தொழுத படலம் * எச்.ஏ. கிருட்டிணனாரும் காப்பியச் சிற்றுறுப்பாக படலம் என்பதைப் பயன்படுத்துகிறார்.

எ.கா : இரட்சண்ய சரித படலம்

சந்தப்பாடல்கள் கம்பருக்குச் சொந்தம். அதுபோலவே சந்தப்பாடல்கள் எச்.ஏ. கிருட்டிணனாருக்கும் சொந்தம்.

எ.கா :

பொல்லாத என்கொல்

வல்லானை என்கொல்

சொல்லாத என்கொல்

பொல்லாங்கை என்கொலோ

கருத்தான உவமைகளைக் கையாள்வதில் கம்பர் வல்லவர். அதுபோல் எச்.ஏ. கிருட்டிணனாரும் கருத்தான உவமைகளைக் கையாண்டுள்ளார்.

எ.கா : 'பழிப்புரை என்னும் கொள்ளி'

'ஒண்ணுமோ வறுங் கூவலுக்கு உததியை ஒடுக்க'

(வற்றிய சிறிய கிணறு தனக்குள் கடலை அடக்கிக் கொள்ள முடியுமா?)

முடிவுரை :

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சொல்லாலும், பொருளாலும், அமைப்பாலும், சிறப்பாலும் கம்பராமாயணத்தைப் போன்றே இரட்ணிய யாத்திரிகம் அமைந்து இருப்பதால் எச்.ஏ. கிருட்டிணனாரைக் 'கிறித்தவக் கம்பர்' என்று சொல்வதில் தமிழுக்குப் பெருமையே!

பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:

4+2=6

47) அ) பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி

ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற

வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்

நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.

- எச்.ஏ. கிருட்டிணனார்

ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு

அச்சாணி அன்னார் உடைத்து.

www.Padasalai.Net